2002 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. முட்டைக்கு முட்டை போட்டாகிவிட்டது. (சிரிப்பு). விடுங்கள்.

வினா எண் 120, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

120—

சலுகைகள்

***4176—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்களுக்கு அரசால் வழங்கப்படும் பல்வேறு வகையான சலுகைகள் சென்றடைகின்றனவா என்ற உண்மைகளை நேரடியாகக் கண்டறிய மாவட்ட வாரியாகக் குழுக்களை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிட இன மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைகள் அம்மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை அரசால் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆதிதிராவிட நலக் குழுக்கள் கண்காணித்து வருகின்றன. தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிட இன மக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு வகைக் கடன் உதவிகள் மாவட்ட வாரியாக அரசு அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் மூலம் பரிசீலித்து வழங்கப்படுகின்றன. இந்நிலையில் இக்குழுக்கள் தவிர, மேலும் குழுக்களை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு அரசால் வழங்கப்படுகிற பல்வேறு சலுகைகள் சென்றடைகின்றனவா என்பதை அறிவதற்கு குழுக்களை அரசு அமைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழுக்களிலே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மாவட்டத்திலே இருக்கின்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஒரு சிலரையும் இணைத்து,

[2002 ஏப்ரல் 10

அதுமட்டுமல்லாமல், சமூக நலனிலே அக்கறை கொண்டிருக்கின்ற சமூக நலத் தொண்டார்வ நிறுவனங்களில் உள்ள ஒரு சிலரையும் இணைத்தால் நன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால், மக்கள் மத்தியிலே நேரடியாக அந்த மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு இந்த பிரதிநிதிகளுக்கு இருக்கிற காரணத்தாலே மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளோடு இவர்களையும் சேர்த்து ஒரு குழு அமைத்தால் அளிக்கப்படுகின்ற அத்தனை நலத் திட்டங்களும் சரியான முறையிலே சென்றடைகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்ற குழுவிலே வாத விவாதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்தக் குழுக்களில் மேற்கண்டவர்களையும் சேர்க்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட இன மக்களுக்காக அரசால் வழங்கப்படும் பல்வேறு வகையான சலுகைகள் அவர்களுக்குச் சென்றடைகின்றனவா என்ற உண்மையைக் கண்டறிய மாவட்ட வாரியாக, மாவட்ட ஆதிதிராவிட நலக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்—செயல் உறுப்பினர்; கோட்டாட்சியர்—உறுப்பினர்; திட்ட அலுவலர் (ஊரக வளர்ச்சி) உறுப்பினர்; மாவட்ட மேலாளர் (தாட்கோ)—உறுப்பினர்; ஏ, பி, சி, டி, நிலையில் ஆதிதிராவிடர் நல அதிகாரிகள் ஒவ்வொருவர் உறுப்பினர்கள்; ஆதிதிராவிட அரசு அலுவலர்களின் மாவட்ட சங்கத் தலைவர் ஓர் உறுப்பினர்; ஆதிதிராவிட அமைப்பின் மாவட்டத் தலைவர்கள் மூவர் உறுப்பினர்கள்; பழங்குடியினர் சங்கத் தலைவர் ஒருவர் உறுப்பினர்; ஆதிதிராவிட வழக்குரைஞர், பேராசிரியர், தொழிலதிபர் ஒவ்வொருவர் உறுப்பினர்கள்; இவர்களுடன் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட சட்டமன்ற உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும், ஒன்றியத் தலைவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட குழு மாவட்ட அளவில் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.கு. தமிழரசன் (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே அமைக்கப்படுகிற ஆதிதிராவிட நலக் குழுக்களைப்

200[illegible] ஏப்ரல் 10]

போல மாநில அளவிலே ஆதிதிராவிட நல உயர்மட்டக் குழு அமைக்கப்படுமா அல்லது பாராளுமன்றத்தில் உள்ளதைப்போல் சட்டமன்றத்திலே ஆதிதிராவிட நல சட்டமன்றக் குழு அமைக்கப்படுமா? அப்படி அமைக்கப்படுமானால் அது குறைந்தபட்சம் ஆண்டுக்கு மூன்று முறை அல்லது நான்கு முறையாவது கூடுகின்ற மரபை அரசு ஏற்படுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் இட ஒதுக்கீட்டிற்கான பின்னடைவுகளை நிரப்புவதற்காக உயர்மட்டக் குழு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்; ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர்; சட்டத் துறைச் செயலாளர் மற்றும் பணியாளர் சீர்திருத்தத் துறைச் செயலாளர், சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையின் செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்றத்தில் உள்ளதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆதிதிராவிட நல சட்டமன்றக் குழு அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வியாகப் போட்டால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைச் சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அவர்களுக்குச் சென்றடைகின்றனவா என்பதை அறியும் குழு வருடத்தில் எத்தனை முறை கூடும் என்பதையும், அதேபோன்று வாகனங்கள் வாங்கக் கடன்; பல்வேறு தொழில்கள் நடத்த 100 சதவீத கடன் அதிகமாக வழங்கப்படுகிறது. அதிலே உண்மையான அந்தப் பயனாளி பயனடையவில்லை என்ற பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அவற்றையெல்லாம் கண்டு இந்த அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதிதிராவிட நலக் குழுக் கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படுகிறது. அந்தக் குழுவினுடைய பணிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் கல்வித்தரம், பயிற்சி நிலை, வசதிகள் மேம்பாட்டிற்கான அறிவுரைகள் வழங்குதல்; விடுதிகளில் விளையாட்டு வசதிகள், நூலக மேம்பாடு, தேர்வு ஆயத்தப் பயிற்சி அளிக்க துணை புரியும். பொங்கல் திருநாள், அம்பேத்கர் பிறந்த நாள் மற்றும்

நினைவு நாள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் பிற பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவில் போட்டிகள், கலைப் போட்டிகள், பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்துதல், அரசுப் பணியிடங்களில் ஒதுக்கீட்டு நடைமுறையை ஆய்வு செய்தல், கல்வி நிறுவனங்களிலே ஒதுக்கீட்டு நடைமுறையை ஆய்வு செய்தல், சிறப்பு உள்ளடக்கத் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் சிறப்பு நிதியின்கீழ் செயல்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை ஆய்வு செய்தல், புதிதாக அறிவுரை வழங்குதல், இத்திட்டங்களைப் பரப்பிட வகை செய்தல், தாட்கோ திட்டங்களைப் பரப்பிட வகை செய்தல், ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை, பயிர்நிலம் வழங்குதலையும், வழங்கியதைப் பேணுதலையும் ஆய்வுசெய்தல், நில உச்சவரம்பு நிலங்கள், பூமிதான நிலங்களை ஆதிதிராவிடர்களுக்கு அளித்தலையும் அளிக்கப்பட்ட நிலங்களைப் பேணுதலையும் ஆய்வு செய்தல், ஆதிதிராவிடர் மேம்பாடு குறித்து பொதுவாக ஆலோசனைகள் கேட்டல் போன்ற பணிகளை இக்குழு கவனித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 121, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

121—

அரசுப் பேருந்து

***12828—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை நகரிலிருந்து கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருவனந்தபுரம் போன்ற இடங்களுக்கு அரசு விரைவுப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு தலைவரவர்களே,*

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருவண்ணாமலையிலிருந்து கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருவனந்தபுரம் போன்ற இடங்களுக்கு பேருந்து இயக்க, திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.